**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2020**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.02.2026 | | |
| பெயர்: | அய்யாசாமி (PW–1 Cross con ) | தகப்பனார் பெயர்: | தங்கசாமி |
| கிராமம்: | கீழசெங்கமேடு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 51/2026 |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: 07.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.16)**

1. எனது வழக்குரையில் 14.11.2019 அன்று எழுதிக் கொடுக்கப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துதான் தாவா சொத்து என்றால் சரிதான். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தில் தெருவிற்கு வடக்கு, பக்கிரிசாமி நஞ்சைக்கு தெற்கு, அன்பழகி மனைக்கு கிழக்கு, நாராயணசாமி மனைக்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நாராயணசாமி மனைக்கு மேற்கு என குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தின் தவறான எல்லை குறித்து பிழைதிருத்த ஆவணம் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது பிராதிலும் ஒரு எல்லை தவறாக குறிப்பிட்டபட்டுள்ளது என கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் பிராதில் கூறாமல் வழக்கிற்காக பொய்யாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரியான நான்கெல்லையை குறிப்பிட்டு அதற்குட்பட்ட சொத்துதான் செட்டில்மென்ட் சொத்து என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

3. பத்திரம் எழுதியவர் பாலகுரு. அந்த பத்திரம் எழுதும்போது மூல ஆவணங்களை பார்த்து எழுதப்பட்டதா அல்லது நான் சொல்ல சொல்ல எழுதப்பட்டதா என்றால் இல்லை, கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றின் அடிப்படையில் எழுதப்பட்டது. நான் சொத்து விபரத்தில் 1ம் பிரதிவாதி மனைக்கு மேற்கு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், நான் எதன் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டேன் என்றால் திரும்பவும்
கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டது.

4. பத்திரப்படி எனக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பிழை திருத்த பத்திரம் எழுதப்பட்டால்தான் அந்த சொத்து எனக்கு முழுமையாக சொந்தமாகும் என்றாலும், திருத்தப்படாத செட்டில்மென்ட்டின் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. எனக்கு பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எனது தகப்பனாரிடம் தான் கேட்க வேண்டும்.

5. மேற்கண்ட பிராதில் குறிப்பிட்டுள்ள மரங்கள் நான் வைத்து வளர்த்ததா என்றால் இல்லை, எனது தகப்பனாரால் வளர்க்கப்பட்டது. ஏற்கனவே, தாவா சொத்து சம்மந்தமாக சமுத்திரத்தம்மாள் என்பவர் கலியன், தங்கவேல் ஆகிய இருவர் மீது இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. தாவா சொத்திற்கு மேற்கில் உள்ள இடம் சமுத்திரத்தம்மாளுக்கு சொந்தமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சமுத்திரத்தம்மாளின் மகன்களை பற்றி எனக்கு தெரியும், 1,2 பிரதிவாதிகள் மற்றும் தனபால் ஆகியோர் ஆவர். சமுத்திரத்தம்மாளுக்கு சொந்தமான 6 சென்ட் இடத்தில் தான் மரங்கள்

உள்ளன என்றால் சரியல்ல. சமுத்திரத்தம்மாளின் இடத்திற்கும், தாவா சொத்திற்கும் இடையில் தெற்கு வடக்காக இருந்த வேலியை சமுத்திரத்தம்மாள் தான் வைத்தார் என்றால் இல்லை, நாங்கள் தான் வைத்தோம்.

7. சமுத்திரத்தம்மாள் காலமான பிறகு 1,2 பிரதிவாதிகள் தான் அந்த மரங்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் எனது பிராதில் வேலி காலில் மரங்கள் உள்ளது என்றும், அதை நான் அனுபவித்து வருகிறேன் என்றும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது பிராதில் மரங்கள் எனது வசத்தில் இருக்கிறது என கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது பிராதில் மரங்கள் எனது வசத்தில் இருக்கிறது என்று குறிப்பிடவில்லை, வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதிகள் எப்போது ஆக்கிரமிக்க முயற்சி செய்தார்கள் என தெரியுமா என்றால் கடந்த 2020 ல் ஆகஸ்டு மாதம், தேதி ஞாபகமில்லை. ஆக்கிரமிக்க முயற்சி செய்தது எவ்வாறு என்றால் பிரதிவாதிகள் மூவரும் எனது வசத்தில் உள்ள மரங்களை வெட்ட முயற்சி செய்வுடன் எனக்கு தகவல் வந்தது. நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். அவ்வாறு தகவல் கிடைக்கும்போது நான் காட்டுமன்னார்கோயிலில் இருந்தேன்.

9. மேற்படி தகவல் மதியம் 3.00 மணியளவில் எனக்கு கிடைத்தது. ஆக்கிரமிக்க முயற்சி செய்தது சம்மந்தமாக சீர்காழி காவல் நிலையத்தில் மாலை 7.00 மணியளவில் நான் புகார் கொடுத்தேன். மனு ரசீது கொடுக்கப்பட்டது, அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காணாமல் போய்விட்டது. அந்த புகாரின் நகல் கைவசம் உள்ளதா என்றால் தற்போது இல்லை.

10. புகார் கொடுத்த 3 நாட்களுக்கு பிறகு நான் பிராது தாக்கல் செய்தேன். செட்டில்மென்ட் ஆவணத்தை திருத்தம் செய்யாமல் வழக்குரையில் தவறாக குறிப்பிட்டு அதனடிப்படையில் தீர்ப்பாணை பெற்று தாவா சொத்தை ஆக்கிரமிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் ஆக்கிரமிக்க

வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராதின் அடிப்படையில் எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.52)**